### கோரிக்கை விடுத்த 24 மணி நேரத்தில்

# சவுதி தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மொழிப் பாடப் புத்தகங்கள்!

## சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகிகளிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே.11-

சவுதி தமிழ் மாணவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று 24 மணி நேரத்துக்குள் தமிழ்ப் பாடப் புத்தகங்கள்700 ஐ ரூ.79 ஆயிரத்து 250 மதிப்பீட்டில் கழக இளைஞர் அணி அறக் கட்டளை மூலம் கழக இளைஞர் அணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகி வெங்கடேசன், பிரான்ஸ் நட்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர் மயிலாடுதுறை ஜெகந்நாதன் ஆகியோரிடம் வழங்கினார்.

சவுதி அரேபியாவில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காகச் செயல்படும் இந்தியா வழியில் - தமிழ் வழியைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இதில் 3ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு மட்டுமே மொழிப் பிரிவு பாடமாக தமிழ்ப் பயிற்றுவிக்கப்படுகிறது.

சவுதி அரேபியாவில் உள்ள கல்வி நிலையங்களில் தமிழ் மொழி பாட புத்தகம் கிடைப்பதில் சிரமம் இருப்பதை அறிந்து கடந்த ஜனவரி மாதம் உலக தமிழர் மாநாட்டில் சவுதி அரேபியா NRTIA நிர்வாகிகளான முதன்மைச் செயலாளர் மயிலாடுதுறை வெங்கடேஷ், துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மக்பூல், கிழக்கு மண்டலப் பொருளாளர் துறையூர் கமால், கிளைகள் அமைப்பாளர் முகவை சீனி முகம்மது உள்ளிட்டோர் கலந்து கொண்டு தமிழ் மொழி பாட புத்தகம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிரமத்தை எடுத்துக் கூறி தமிழ்நாடு அரசு தமிழ் பாடப்புத்தகத்தை இலவசமாக தர வேண்டும் என்ற கோரிக்கையையும் முன் வைத்தனர்.

இக்கோரிக்கையை கனிவுடன் கவனித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழி பாட புத்தகம் தடையின்றி கிடைக்க ஆவண செய்தார்.

இந்நிலையில் தமிழ் மாணவர்கள் கல்விப் பயில தமிழ்ப் மொழிப் பாடப் புத்தகங்கள் தேவைப்படுவது குறித்து சவுதி தி.மு.க. அயலக அணி சார்பாக கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதய நிதி ஸ்டாலின் அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கோரிக்கை விடுத்த 24 மணி நேரத்திற்குள் இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் 79 ஆயிரத்து 250 ரூபாய் செலவில் தமிழ்நாடு பாட நூல் கழகத்தில் இருந்து 700 புத்தகங்கள் வாங்கப்பட்டு சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகி வெங்கடேசனிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின்போது பிரான்ஸ் நட்பு தமிழ்ச் சங்க துணைத் தலைவர் ஜெகந்நாதன் உடனிருந்தார்.

சவுதி தமிழ் மாணவர்களுக்காக உடனடியாக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் தமிழ்ப் பாடப் புத்தகங்களை கொடுத்து உதவிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் துரிதமாக புத்தகங்கள் கிடைக்க பேருதவி புரிந்த கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் சவுதி தமிழ் மாணவர்கள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று சவுதி தி.மு.க. அயலக அணி நிர்வாகி வெங்கடேசன், பிரான்ஸ் தமிழ்ச் சங்க துணைத் தலைவர் ஜெகந்நாதன் ஆகியோர் தெரிவித்துக் கொண்டனர்.



சவுதி அரேபியாவிலுள்ள பள்ளிகளில் 3 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் மொழிப்பாடம் பயிற்றுவிக்கப்படுகிறது. அங்கு தமிழ் பாடநூல்கள் கிடைப்பதில்லை என்பதால், கழக அயலக அணியின் முன்னெடுப்பில், கழக இளைஞர் அணி அறக்கட்டளை மூலம் தமிழ்நாடு பாடநூல் கழகத்திடமிருந்து 700 தமிழ் மொழிப்பாடநூல்களை ரூ. 79,250க்கு வாங்கி அவற்றை, சவுதியில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு வழங்கும் வண்ணம் அயலக அணி நிர்வாகி வெங்கடேசனிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் பிரான்சு தமிழ்ச்சங்க துணைத் தலைவர் ஜெகந்நாதன் உள்ளார்.





